<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 56/2022

Deposition of Witness : DW 1

Name : கோபால் (வயது – 62)

Father's Name /W/o : த/பெ பொன்னுசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பெருங்களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.09.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் பிரமாண ஆவணம் எனக்காக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேனா அல்லது மற்ற பிரதிவாதிகளுக்கு சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் மற்ற பிரதிவாதிகளுக்கு சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விபரத்தை என் வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.234/2 முதன் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டது. பொன்னுசாமி என்பவர் யாரிடமிருந்து கிரையம் பெற்றாரா என்றால் அரசிடமிருந்து ஒப்படைப்பு பட்டா பெற்றார்.

2. ஒப்படைப்பு பட்டா எந்த தேதியில் அரசு வழங்கியது என்றால் 1970 ஆம் ஆண்டு வழங்கியது. எந்த சர்வே எண்ணிற்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சர்வே எண்.234/2, 2 ஏக்கர் 8 செண்ட். வேறு எந்த சர்வே எண்ணுக்கு ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சர்வே எண்.234/2க்கு மட்டும் தான் வழங்கப்பட்டது.

3. சர்வே எண்.234/2 உட்பிரிவு செய்து கொடுத்தர்களா அல்லது உட்பிரிவு செய்யாமல் கொடுத்தார்களா என்றால் உட்பிரிவு செய்யாமல்தான் கொடுத்ததார்கள். 2006 ஆம் ஆண்டில் ஈஸ்வரி வகையறாமிருந்து ரவி என்பவர் கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 2022 ஆம் ஆண்டில் என் மீது வழக்கு தாக்கல் செய்த போது தான் எனக்கு மேற்படி விபரம் தெரியும்.

4. நான் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் A.S எண்.7/2015 மேல்முறையீடு செய்தேனா என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் 2006 ஆம் ஆண்டு ரவி கிரையம் வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி 2006 ஆம் ஆண்டு ஆவணத்தை தாக்கல் செய்த போது ரவி மற்றும் ஈஸ்வரி வகையறாவை தரப்பினர்களாக சேர்த்தேனா என்றால் இல்லை. 2006 ஆவணம் மேல்முறையீடு வழக்கில் தாக்கல் செய்த போது நான் ஏன் ரவியை தரப்பினராக சேர்க்வில்லை என்றால் வழக்கு நிலுவையில் இருந்த போது வட்டாட்சியர் 2006 ஆவணம் குறித்து எந்த மாற்றமும் செய்ய கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார் அதனால் ரவியை தரப்பினராக சேர்க்கவில்லை.

5. என்ன மாற்றம் செய்யகூடாது என்று வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் எந்த மாற்றமும் செய்யகூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். வட்டாட்சியருக்கு 2006 ஆவணம் பத்திரம் மாற்றம் செய்யகூடாது என்ற உத்தரவு பிறப்பிக்க முடியாது என்றால் தெரியாது. ரவி எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் தெரியாது. எனக்கு பூர்வீகம் எந்த ஊர் என்றால் பெருங்களத்தூர். தாவா சொத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு துரம் என்றால் சுமார் 20 அல்லது 30 அடி தூரம் இருக்கும் . 2006 ஆண்டிற்கு பிறகு தாவா சொத்து குறித்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த வருடம் பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. வாதி தரண்சாய் கிரையம் வாங்கிய விபரம் வில்லங்க சான்றிதழில் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

6. மேற்படி வில்லங்க சான்றிதழில் பார்த்த பிறகு ரவி மற்றும் வாதிக்கு என்பவர்களுக்கு தாவா சொத்தை வாங்க கூடாது என்று சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 2006, 2022 ஆம் ஆண்டுகளில் பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். எந்த வருடம் எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை.

7. பத்திரம் செல்லாது என்ற வழக்கு ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வட்டாட்சியர் 1993,1996 பிறப்பித்த உத்தரவினால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி உத்தரவு யார் பெயரில் பிறப்பிக்கப்பட்டது என்றால் பொன்னுசாமி மற்றும் கிராம நிர்வாக அலுவலருக்கு பிறப்பிக்கப்பட்டது. என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2009 ஆம் ஆண்டில் இறந்தார். என் தந்தை 2009 ஆம் ஆண்டு இறக்கும் வரை அவர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இருந்தது. 2008,2009 ஆம் ஆண்டில் என் தந்தை பெயரில் உள்ள பட்டா இருந்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா என் என்னவென்றால் 775. பட்டா எண்.775 பார்த்தால் எந்த வருடம் தந்தைக்கு பட்டா ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான்.